2

# ''ஆபிரகாம் – இரட்சிப்பின் தொடக்கம்''

## (ஆதியாகமம் 12 & 15)

*"ஒருவருடைய முக்கியத்துவத்தை ஒருக்காலும் குறைத்து மதிப்பிடாதீர்கள்" என்று அடிக்கடி கூறப்படுவது உண்டு. இந்தக் கூற்றானது வேதாகம ரீதியான எடுத்துரைப்புக்கு நிச்சயமாகவே உண்மையாக உள்ளது, எனெனில் தனிநபர் ஒருவரின் முக்கியத்துவத்தைத் தேவன் ஒருக்காலும் கவனியாது விடுவதில்லை. மனித இனமானது ஆதாம் என்ற ஒரே ஒரு மனிதனைப் படைத்ததைக் கொண்டு தொடங்கிற்று. பிற்பாடு ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில், மனித இனத்தின் தொடர்ச்சி,நோவா என்ற ஒரே ஒரு மனிதனைச் சார்ந்திருந்தது. எகிப்திய அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் மக்கள் விடுவிக்கப்பட்டது மோசே என்ற ஒரே ஒரு மனிதரால் வழிநடத்தப்பட்டது. நிறைவாக இஸ்ரவேலின் மேசியாவும் உலகத்தின் மீட்பருமாகியவரின் பிறப்பு (உண்மையில் தனது இளம் வாலிப வயதுகளில் இருந்த ஒரு இளம்பெண்ணான) ஒரே ஒரு பெண் மூலமாக நிறைவேற்றப்பட்டது.*

*ஆகவே பாவம் என்ற பிரச்சனைக்கான தேவனுடைய தீர்வு (இது ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் இருந்து விளைந்ததாகும்) ஒரே ஒரு மனிதனைக் கொண்டு தொடங்கிற்று என்பதில் வியப்பு எதுவும் இல்லை. அந்த மனிதர் ஆபிரகாம் என்பவராக இருந்தார், அந்த வேளையில் "ஆபிராம்" என்பது அவரது பெயராக இருந்தது.*

*ஆதியாகமம் 1-3 அதிகாரங்கள் உலகமும் அதன் மனித மக்கள் தொகையும் படைக்கப்பட்டதை பற்றியும் மேலும் பாவத்தின் தொடக்கத்தைப் பற்றியும் பதிவுசெய்கிறது. 4 முதல் 11வரையிலான அதிகாரங்கள், ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து விஷயங்கள் இன்னும் மோசமாக ஆனதைக் காண்பிக்கின்றன. ஆகவே தேவன் தமது படைப்பைத் தமது சித்தத்திற்கு கொண்டு வருதல் என்ற நூற்றாண்டுகள் கால அளவிற்கு நீண்ட செயல்முறையை, தமது திட்டத்தில் ஒரு விசேஷித்த கருவியாக இருக்கும்படி ஆபிரகாமை அழைத்ததன் மூலம் தொடங்கினார். இந்த அழைப்பு ஆதியாகமம் 12 மற்றும் 15ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*ஆபிரகாம், இஸ்ரவேலின் ''மாபெரும் முற்பிதாக்கள்'' மூவரில் முதலாமவராக இருந்தார்: ஆபிரகாம், அவரது மகன் ஈசாக்கு மற்றும் ஈசாக்கின் மகன் யாக்கோபு. இந்த மூவரும் தோராயமாக கி.மு. 2100-1700 என்ற காலகட்டத்தில் வாழ்ந்தனர்.*

*ஆபிரகாமின் பேரனான யாக்கோபுக்கு பன்னிரெண்டு மகன்கள் இருந்தனர், இவர்கள் "இஸ்ரவேல்'' (இது யாக்கோபுவின் மறுபெயராகும்;*

*காண்க ஆதியாகமம் 32:28) என்று அறியப்பட்ட மக்களினத்தின் பன்னிரெண்டு "கோத்திரங்களின்" தலைவர்களாக ("முற்பிதாக்களாக") ஆயினர். இஸ்ரவேல் மக்களில் (விசேஷமாக, யூதா கோத்திரத்தில்) இருந்து நிறைவாக, இயேசு என்ற மேசியா வருவதாக இருந்தார். அவரே பாவத்திற்கான நிறைவான தீர்வாக இருப்பார். இது யாவும் இந்த ஒரு மனிதரை அழைத்தலையும் அவரது விசுவாசமான பதில்செயலையும் கொண்டு தொடங்கிற்று.*

*தேவன் ஆபிரகாமைச் சந்தித்த முதல் நிகழ்வு ஆதியாகமம் 12:1-4ல் பதிவு செய்யப்பட்டுள்ளது, இங்கு அவர் (தேவன்) தமது "உடன்படிக்கையை" அவரிடம் (ஆபிரகாமிடம்) முதன்முதலாக எடுத்து உரைத்தார். இந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் ஆதியாகமம் 15:1-6ல் மீண்டும் உரைக்கப்பட்டு அதிகம் வெளிப்படையாக்கப்பட்டன. இவ்விரு வசனப் பகுதிகளையும் கண்ணோக்குவதன் மூலம் நாம், வரவிருந்த இரட்சிப்பின் இயல்பைப் பற்றிய முக்கியமான சில கருத்துக்களைக் கற்றறிய முடியும்.*

## இரட்சிப்பு என்பது தேவனுடைய திட்டத்தின்படியானதாக இருக்கும்

*ஆபிரகாமுடன் தேவனுடைய உடன்படிக்கையானது, மனித இனத்தின் இரட்சிப்பு என்பது மனிதரீதியான முதற்செயல் அல்லது முயற்சியின் விளைவாக வராது என்பதைத் தெளிவாக்குகிறது. படைப்பின் முதற்செயல் என்பது தேவனுடையதாக இருந்தது போன்றே மனித இனத்தின் மறுவுருவாக்கத்தையும் தேவனே தொடங்குவார். இந்த செயல்முறை "தேர்ந்து கொள்ளுதல்" என்று அழைக்கப்படுகிறது. தேவன் தாம் செயல்படுவதற்கு ஆபிரகாமையும் அவரது சந்ததியார்களையும் தேர்ந்து (அல்லது "தெரிந்து") கொண்டார். இந்தத் தேர்ந்துகொள்ளுதல் யூதப்பாரம்பரியங்கள் சிலவற்றின் உரிமைகோருதல் போன்று ஆபிரகாமின் நற்தன்மை அல்லது பூரணத்துவத்தைச் சார்ந்து இருக்கவில்லை. ஆபிரகாம் பாவமற்ற தன்மையில் இருந்து தொலைவில் இருந்தார் என்பதைக் காண்பதற்கு, ஒருவர் ஆதியாகமம் 16 முதல் 25 வரையில் உள்ள அதிகாரங்களை மாத்திரம் வாசித்தல் தேவையாக உள்ளது. அவர் பொய்கூறினார், தமது விசுவாசத்தில் அலைவுபட்டிருந்தார் மற்றும் தமது குடும்பத்தைத் தவறாக மேலாண்மை செய்தார். இல்லை, தேவன் ஆபிரகாமைத் தேர்ந்துகொண்டது, ஆபிரகாமின் தகுதியால் அல்ல ஆனால் தேவனுடைய கிருபையால் ஆனதாகவே இருந்தது.*

*ஆதியாகமம் 12:2, 3ல் தேவன் ஒரு விசாலமான வரைக்குறிப்பில் தமது திட்டத்தை வெளிப்படுத்தினார். ஆபிரகாமில் இருந்து ஒரு மாபெரும் மக்களினம் வரும், மற்றும் அந்த மக்களினத்தில் இருந்து, "பூமியிலுள்ள சகல குடும்பங்களுக்கும்" ஆசீர்வாதமாக இருக்கும் ஒருவர் வருவார். வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகள் 3ம் வசனத்தின் பிற்பகுதியைப் பின்வருமாறு தரவழைக்கின்றன: "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் தங்களை ஆசீர்வதித்துக் கொள்ளும்" (RSV). ESV போன்ற பிற மொழிபெயர்ப்புகளில், "பூமியின் எல்லாக்குடும்பங்களும் உனக்குள் அல்லது உன்னால் ஆசீர்வதிக்கப்படும்" என்றுள்ளது. எதிர்காலத் தலைமுறைகள் (மற்றும் இஸ்ரவேலைத் தவிர மற்ற மக்களினங்களும்) ஆசீர்வாதங்களை உச்சரித்துப்*

பேசுவதில் ஆபிரகாமின் பெயர் இருக்கும் என்பதே முதல் வாசிப்பின் கருத்துப் பொருளாக உள்ளது. இரண்டாவது வாசிப்பானது, எல்லா மக்களினமும் ஆபிரகாமின் மூலமாக நிறைவாக ஆசீர்வதிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது; ஏனெனில் உலகத்தின் மீட்பரான இயேசு, அவரது (ஆபிரகாமின்) சந்ததிகளில் ஒருவராக இருப்பார். இவ்விரு மொழிபெயர்ப்புகளுமே இலக்கணரீதியாகச் சாத்தியமானவையாகவும் ஓரளவிற்கு உண்மையாகவும் உள்ளன, ஆனால் பிந்திய மொழிபெயர்ப்பானது, ஏவுதல் பெற்ற எழுத்தாளரின் விருப்பநோக்கத்தை அதிகமாகக் காத்துக்கொள்வதாக இருக்கலாம், ஏனெனில் உண்மையில் இதுவே நடந்தது என்பதை வேதமாகத்தின் எஞ்சிய பகுதி உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், உலகத்தை ஆசீர்வதிக்க ஆபிரகாமின் மூலம் செயல்படுதல் என்பதே தேவனுடைய திட்டமாக இருந்தது. இது இயேசுவின் வருகை மற்றும் நமது பாவங்களுக்காக அவர் மரித்து உயிர்த்தல் ஆகியவற்றில் உச்ச கட்டத்தை அடைந்தது.

1 கொரிந்தியர் 15:20-28ல் பவுல், ''சகலமும்'' தேவனுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது பற்றிப் பேசுகையில், இந்தத் திட்டத்தைப் பற்றியே அவர் பேசினார். அவர் 1 கொரிந்தியர் 15:42-50ல், "முதல் மனிதனால்'' அறிமுகப்படுத்தப்பட்ட பாவத்தின் செயல்விளைவுகளைத் திருப்பிப்போடும் வருகையைச் செய்யும் "பிந்தின ஆதாம்" என்று இயேசுவைக் குறிப்பிட்டபோது, இந்த சத்தியத்திற்குக் கூடுதலான வலியுறுத்தத்தைக் கொடுத்தார். அதுபோலவே, வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5 வசனப் பகுதியானது, பாவத்திற்குள் விழுந்ததின் செயல்விளைவுகளை நிறைவாகத் திருப்பிப்போடுதல் என்ற வகையில் நித்தியத்துவத்தைச் சித்தரிக்கிறது. பரலோகமானது, மீண்டும் எல்லாரும் அடையக்கூடிய "ஜீவ விருட்சத்தைக்'' கொண்டு நிறைவு பெற்றிருக்கும் தோட்டம் என்ற சொற்றொடர்களில் விவரிக்கப்படுகிறது.

காலத்தைப் பற்றிய வேதாகம ரீதியான கண்ணோட்டம் நீள்வகையானதாக உள்ளது. இது, காலம் என்பது (படைப்பில்) ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தது என்றும் அது (இயேசு மீண்டும் வரும்போது) மிகநிச்சயமாக ஒரு முடிவைக் கொண்டிருக்கும் என்றும் மாத்திரம் அர்த்தப்படுகிறது. பல மதங்கள் காலத்தின் சுழற்சிக் கண்ணோக்கை முன்வைக்கின்றன. இந்தக் கருத்தின்படி, தொடக்கமோ அல்லது முடிவோ இருப்பதில்லை; ஒவ்வொரு விஷயமும் சுழற்சிகளில் மாத்திரம் நடக்கிறது. மையக் கருத்தில் காணும்போது இது வேதாகமத்தின் கண்ணோட்டத்துடன் ஒப்பிடுகையில், நம்பிக்கையற்ற கண்ணோக்காவே உள்ளது, ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு காட்சி அமைவில் எந்த ஒரு விஷயமும் உண்மையில் மாற முடியாது. பாவம், மரணம் மற்றும் துன்புறுதல் ஆகியவற்றிற்கு நிறைவான முடிவு எதுவும் இருக்கமுடியாது - ஒரே மாதிரியான விஷயங்கள் திரும்பத் திரும்ப நடைபெறும் வடிவங்கள் மாத்திரமே உள்ளன. காலம் பற்றிய வேதாகரீதியான நீள்வகைக் கண்ணோக்குடன், ஒவ்வொரு விஷயமும் மாபெரும் உச்சக்காட்சியை நோக்கியும் நம் எல்லாரையும் படைத்த தேவனுடன் ஒரு மறு இணைப்பை நோக்கியும் முன்செல்லுகிறது. இது நாம் ஒவ்வொருவரும் கால ஓட்டத்தில் பிடிபட்டுள்ளோம் என்றும், கிறிஸ்துவின் மூலமாக நித்திய வாழ்வு அல்லது அவரின்றி ஒரு நித்திய அழிவு என்ற நித்தியத்தை நோக்கி முன்செல்லுகிறோம் என்பதையும் அர்த்தப்படுத்துகிறது.

# இரட்சிப்பு என்பது ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் அமையும்

ஆதியாகமம் 12ல் தேவன் ஆபிரகாமுடன் பேசி அவருடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். ஒரு ‘‘உடன்படிக்கை’’ என்பது வாக்குத்தத்தங்கள் இணைந்த ஒரு முறையான ஒப்பந்தமாக உள்ளது. மக்களில் இருவர், ஒரு திருமண உடன்படிக்கையில் உள்ளது போன்று, தங்களுக்கிடையே ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இருப்பினும் வேதாகமத்தில், மனிதகுலத்துடன் உடன்படிக்கைளைத் தேவனே எப்போதும் தொடங்கி வைப்பவராக இருந்தார், அவரே நிபந்தனைகளை ஏற்படுத்தினார், அவரே ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் செய்தார். விசுவாசித்தலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதலும் மாத்திரமே மனிதரின் பங்காக இருந்தது. தேவன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியபோது, அது ஒருக்காலும் “சமமானவர்களுக்கு இடையிலான ஒப்பந்தமாக” இருக்க இயலாதிருந்தது. ஆபிரகாமுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை விஷயத்தில், அவர் [தேவன்] வாக்குத்தத்தங்களை வழங்கினார் மற்றும் அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா என்பதை ஆபிரகாமே தீர்மானிக்க வேண்டியவராக இருந்தார்.

இந்த உடன்படிக்கையில் ஐந்து வாக்குத்தத்தங்கள் தரப்பட்டன:

1. தேவன் ஆபிரகாமுக்கு ஒரு நாட்டைக் கொடுப்பார் (ஆதியாகமம் 12:1). ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து கானான் நாட்டிற்குப் போன உடன், தேவன் இன்னும் அதிகம் திட்டவட்டமாகக் குறிப்பிடுபவர் ஆனார்: “உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்” (வசனம் 7).

2. தேவன் ஆபிரகாமின் குடும்பத்தை வல்லமை நிறைந்த மக்களாகக் கட்டி எழுப்புவார். தேவன், “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி” என்று மாத்திரம் கூறினார் (12:2அ). தேவன் இந்த வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியபோது, ஆபிரகாமுக்கு மாம்சப்பிரகாரமான சந்ததிகள் எதுவும் இருந்திருக்கவில்லை என்பதால், இது உண்மையிலேயே ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது (11:30).

3. தேவன் ஆபிரகாமின் பெயரைப் பெருமைப்படுத்துவார் (வசனம் 2). இது தேவன் ஆபிரகாமை மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆக்குவார் என்று அர்த்தப்படுவதாகக் காணப்படுகிறது. இந்த வாக்குத்தத்தம் உண்மையானது என்று நிச்சயமாகவே நிரூபிக்கப் பட்டுள்ளது. அவரது பெயரானது உலகம் முழுவதிலும் காலங்கள் யாவற்றிலும் அறியப்பட்டுள்ளது.

4. தேவன் ஆபிரகாமைப் பாதுகாப்பார். “உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்” (12:3அ).

5. ஆபிரகாமின் மூலமாக பூமியில் உள்ள எல்லா மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும் (12:3).

ஆபிரகாம் தமது பங்கிற்கு, தேவன் மீது நம்பிக்கை வைத்து அவர் கூறியதைச் செய்ய வேண்டி மாத்திரம் இருந்தது. 1ம் வசனம் அனேகமாக, ஆபிரகாமின் விசுவாசத்திற்கு மாபெரும் தொடக்க அறைகூவலைக் கொண்டிருந்தது: “நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.” ஆபிரகாம் தமது சொந்த நாட்டை விட்டுச் செல்வது மட்டுமல்ல, ஆனால் தமது குடும்பத்துடன்

*(இவர்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்களாக இருந்தனர் என்று நாம் பிற்பாடு அறிகிறோம்) இருந்த பிணைப்புக்களையும் அறுத்தெறிய வேண்டியவராக இருந்தார். இதைச் செய்ததில் அவர், பூமிக்குரிய பாதுகாப்பு மற்றும் வசதி ஆகியவற்றின் அடையாளங்கள் யாவற்றையும் பின்விட்டுச் செல்பவராக இருப்பார். அவர் எங்கே செல்ல வேண்டி இருந்தது? "நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு." அந்த வேளையில் அவர் அதை மாத்திரமே அறிந்திருந்தார்; மேலும் விவரிப்புகள் அளிக்கப் பட்டிருக்கவில்லை. இந்த நாட்டைப்பற்றி அதிகமாகக் கண்டறிவதற்கு ஆபிரகாம் தேவன் மீது நம்பிக்கை வைத்து தாம் அனுப்பப்பட்ட இடத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது. ஆபிரகாமுக்கு நன்மதிப்பு அளிக்கும் வகையில் 12:4அ வசனப் பகுதியானது, "கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்" என்று கூறுகிறது.*

*வேதவசனங்கள் முழுவதிலும் தேவன், உடன்படிக்கையை - ஏற்படுத்துபவராகவும் உடன்படிக்கையைக் காத்துக்கொள்பவராகவும் காண்பிக்கப் பட்டுள்ளார். அவரது படைப்புயிர்கள் அவரது வார்த்தையின்மீது முற்றிலுமாக நம்பிக்கை வைக்க முடியும். இதற்கான ஏராளமான உதாரணங்கள் நாம் குறிப்பிடுவதற்கென்று வேதாகமத்தில் தரப்பட்டுள்ளன, ஆனால் இங்கு ஒருசில மாத்திரம் உள்ளன. பெருவெள்ளம் மற்றும் அதிலிருந்து நோவாவின் குடும்பம் காக்கப்படுதல் ஆகியவற்றைப் பற்றித் தேவன் நோவாவுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். பின்பு அவர் இனி ஒருக்காலும் தண்ணீரினால் பூமியை மீண்டும் அழிக்கப் போவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்தார் (ஆதியாகமம் 6:5-9:17). பிற்பாடு அவர் சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அவர்கள் தமது மக்களாக இருக்க மனவிருப்பம் கொண்டிருந்தால், தாம் அவர்களின் தேவனாக இருப்பதாக வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தத்தின் ஒரு தனிப்பட்ட அம்சத்தில் கூட அவர் ஒருக்காலும் தவறவில்லை (யாத்திராகமம் 19; 20). பின்பு இயேசு வந்தார்; அவர் மூலமாகத் தேவன் மனித இனம் முழுவதுடனும் ஒரு "புதிய உடன்படிக்கையை" ஏற்படுத்தினார். இப்போது அவர் இயேசுவின் மீதும் சிலுவையில் அவர் செய்த தியாகத்தின்மீதும் கொள்ளப்படும் விசுவாசத்தின் மூலமாக நித்திய இரட்சிப்பை வாக்குத்தத்தம் செய்கிறார் (லூக்கா 22:20; எபிரெயர் 9:11-22). பின்வருவதுதான் மிகச்சரியாக இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமாக உள்ளது: நம்மைப் படைத்த தேவனுடன் ஒரு உடன்படிக்கை உறவில் நுழைந்து அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு அழைப்பு.*

## இரட்சிப்பு என்பது ஆபிரகாமின் சந்ததியார் மூலமாகவே வரும்

*தேவன் ஆபிரகாமை ''பெரிய மக்களினமாக'' ஆக்குவதாக வாக்களித்திருந்தார், ஆனால் மிகப் பெரிய பிரச்சனை ஒன்று இருந்தது: ஆபிரகாம் வயது சென்றவராகவும் பிள்ளைகள் இல்லாதவராகவும் இருந்தார். ஆபிரகாமுக்கு இது உடன்படிக்கையின், நம்பிக்கை கொள்ள மிகக் கடினமான பகுதியாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. அதனால்தான் இந்த வாக்குத்தத்தம் ஆதியாகமம் 15:1-6ல் குறிப்பிட்ட வகையில் கவனம் குவிக்கக் கூடியதாக உள்ளது. தேவன் ஆபிரகாமிடத்தில், "அவருக்குக் கிடைக்கும்*

*பலன் மிகவும் பெரிதாக இருக்கும்" என்று மறு உறுதி அளித்திருந்திருந்தார் (வசனம் 1). ஆபிரகாம் சலிப்புடன், "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே ... தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான்" என்று ஒருவகையில் சலிப்புடன் பதில் உரைத்தார் (15:2, 3). ஆபிரகாமுக்குப் பிறக்கும் மகன் அவருக்குச் சுதந்தரவாளியாக இருப்பார் என்றும் அவரது சந்ததியார் வானத்து நட்சத்திரங்களைப் போன்று எண்ணிறந்தவர்களாக இருப்பார்கள் என்றும் தேவன் ஆபிரகாமுக்கு மறு உறுதி அளித்தார் (15:4, 5). அந்த சந்ததியார்களின் மூலமாகத் தேவன் உலகத்தையே ஆசீர்வதிக்க இருந்தார், அந்த சந்ததியார்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படாது.*

*மீண்டும், இந்த ஆசீர்வாதம் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு நபர் மூலமாக வர வேண்டி இருந்தது. கலாத்தியர் 3:16ல் "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அது கிறிஸ்துவே" என்று கூறியபோது பவுல் இதையே வலியுறுத்தினார். ஆபிரகாமுக்குத் தேவன் அளித்திருந்த வாக்குத்தத்தம் நிறைவேறுதலைக் கொண்டுவருவதில், நாற்பதிற்கும் அதிகமான தலைமுறைகளுக்குப் பின்பு இயேசு, காலங்களின் கவனக் குறிப்பிடமாக வர வேண்டி இருந்தது. எனவே, புதிய ஏற்பாடு பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குவதில் வியப்பு எதுவும் இல்லை: "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (மத்தேயு 1:1).*

*இயேசுவின் மூலமாகவே மக்களினங்கள் யாவும் குறிப்பாக ஆசீர்வதிக்கப்பட வேண்டியதாக இருந்தது. அவர் தேவனுடைய ஆசீர்வாதத்தை (ஆபிரகாமின் மாம்சப்பிரகாரமான சந்ததியார்களான) இஸ்ரவேல் மக்களினத்திற்கு வெளியே, "பூமியின் எல்லாக் குடும்பங்களுக்கும்" எடுத்துச் சென்றார் (ஆதியாகமம் 12:3). இயேசு பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்றுமுன்னர், அவர் தமது சீஷர்களுக்கு, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து" (மத்தேயு 28:19) என்று அறிவுறுத்தியபோது, அந்த வாக்குத்தத்தத்தின் தொடர்ச்சியானது தெளிவாக்கப்பட்டது. இங்கு ஆபிரகாமுக்குத் தேவன் அளித்திருந்த வாக்குத்தத்தத்தின் நிறைவான நிறைவேற்றம் இருந்தது; அவரது சந்ததியார் மூலமாக உலகம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும்.*

## *இரட்சிப்பு என்பது விசுவாசத்தைச் சார்ந்ததாக இருக்கும்*

*ஆதியாகமம் 12:1-4ல் தேவன் தமது வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கும்படியும், பூமிக்குரிய பாதுகாப்பான விஷயங்கள் யாவற்றையும் கைவிடும்படியும், ஆதாரமின்றியே தம்மீது நம்பிக்கை கொள்ளும்படியும் ஆபிரகாமுக்கு அறைகூவல் விடுத்தார். அவர் (தேவன்) அவருக்கு (ஆபிரகாமுக்கு), கானான் நாட்டின் வனப்புகளை விவரிக்கும் ஒரு பயணக் கையேட்டையோ அல்லது*

அங்கு ஆதாயப்படுத்தக்கூடிய செல்வங்கள் பற்றிய முக்கிய அம்சங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றையோ அளிக்கவில்லை. அவர் தம்மையும் தமது வார்த்தையும் மாத்திரமே அளித்தார். அதுபோன்றே, சந்ததி ஒன்று தரப்படும் என்று வாக்களிக்கப்பட்டதில், குழந்தைகளுக்குத் தந்தையாகும் விஷயத்தைப் பொறுத்தமட்டில் "சரீரம் செத்தவர்" என்ற வகையில் முதிர் வயதாக இருக்கும் ஒரு மனிதர் மாபெரும் மக்களினத்திற்குத் தந்தையானவர் என்ற கேலிக்குரிய கருத்தை ஆபிரகாம் எதிர்கொண்டார் (எபிரெயர் 11:12; ரோமர் 4:19). இருந்தபோதிலும் ஆபிரகாம் "கர்த்தரை விசுவாசித்தார்" என்று ஆதியாகமம் 15:6ம் வசனம் கூறுகிறது. உலகப்பிரகாரமான ஆதாரம் நேர்மாறானதைக் கருத்தாகத் தெரிவித்த போதிலும், அவர் மீதும் அவரது வாக்குத்தத்தங்களைச் செயல்படுத்தும் அவரது திறன்மீதும் ஆபிரகாம் நம்பிக்கை வைத்தார்.

பிற்பாடு அந்த விசுவாசம் மிகச் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்த வாக்குத்தத்தங்கள் யார்மூலம் நிறைவேற்றப்பட இருந்ததோ அந்த நபரை, அதாவது ஆபிரகாமின் மகன் ஈசாக்கை அவர் மோரியா மலைக்குக் கூட்டிச்சென்று அங்கே அவரைப் பலிசெலுத்த வேண்டும் என்று தேவன் அறிவுறுத்தியதை ஆதியாகமம் 22ம் அதிகாரம் பதிவுசெய்துள்ளது. தேவன் இடையிட்டு ஆபிரகாம் அந்தச் சோதனையில் வெற்றிபெற்றார் என்று கூறாதிருந்தால் ஆபிரகாம் அவ்வாறே பலி செலுத்தி இருப்பார். இப்போது அவர் தமது விசுவாசத்தில் முழுமையான அளவுக்குத் தேறியிருந்ததைச் செயல்விளக்கப் படுத்தினார். ஈசாக்கைப் பலியிடுதலை ஆபிரகாம் சாத்தியமான வகையில் எவ்வாறு ஆழ்ந்து சிந்தித்து இருக்க முடியும் என்று நாம் வியப்படையலாம், அது சந்ததிகளின் "மக்களினம்" பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு நேர் எதிராகச் செயல்பட்டு இருக்காதா? ஆபிரகாம், கீழ்ப்படியாமலிருப்பதற்கான தமது வழியைப் பகுத்தறிந்து பார்த்தல் என்பது அவருக்குச் சுலபமானதாக இருந்திருக்கும், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை - அது ஏன் என்பதை வேதாகமம் பிற்பாடு பின்வருமாறு கூறுகிறது:

> மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே"; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், *மரித்தோரிலிருந்துமெழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி,* தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான் (எபிரெயர் 11:17-19; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஆபிரகாம் தமது மகனைப் பலிசெலுத்த விசுவாசத்தைத் திரட்ட எவ்வாறு முடிந்தது? தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் அவர் வல்லமை ஆகியவற்றின்மீது அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கையினால், அவர் ஈசாக்கைப் பலிசெத்தினாலும் அவரை மரித்தோரில் இருந்து எழுப்பத் தேவன் திட்டமிட்டு இருக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். ஆபிரகாம் இடறி, தமது விசுவாசத்தில் அலைவு பட்டிருந்தாலும், அவர் எப்போதுமே, தம்மை

அழைத்து தமது முழுமையான வார்த்தையைத் தமக்குக் கொடுத்திருந்த தேவன் மீதான நம்பிக்கைக்குத் திரும்ப வந்தார். எனவே பவுல் "நிறைவான விசுவாசி" பற்றிய உதாரணத்தைக் கொடுத்தபோது, அவர் ஆபிரகாமின் பெயரைப் பயன்படுத்தியதில் வியப்பு எதுவும் இல்லை:

> தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார் (ரோமர் 4:20-25; காண்க வசனங்கள் 1-3, 11, 12).

## முடிவுரை

ஆபிரகாமைத் தேவன் சந்தித்த நிகழ்ச்சியானது, இரட்சிப்பு எவ்வாறு வரும் மற்றும் அது எவ்வாறு செயல்படும் என்பது பற்றிய பழங்காலக் கொள்கைகள் சிலவற்றை நிலைநாட்டிற்று. ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் செய்தவற்றின் நிறைவேற்றத்தினுடைய கருத்து நோக்கில் இருந்தே நாம் இன்றைய நாட்களில் பின்வரும் இரட்சிப்பைக் கண்ணோக்கக் கூடியவர்களாக இருக்கும்படி ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்: இயேசுவின் வருகை, உலகம் முழுவதின் பாவங்களுக்கான அவரது மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல். ஆபிரகாமிடத்தில் தேவன் முன்னுரைத்தவை, தேவன் அவற்றை முதலில் பேசிய போது இருந்ததைக் காட்டிலும் இன்றைய நாட்களில் குறைவான உண்மையாக இருப்பதில்லை: நமக்கு இரட்சிப்பு என்பது தேவன் கவனநிறைவுடன் செயல்படுத்திய திட்டத்தின் மூலமாகவே வந்துள்ளது. இது ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் மாபெரும் வாக்குத்தத்தங்கள் மற்றும் ஆசீர்வாதங்களைக் கொண்டுள்ள புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது (காண்க எபிரேயர் 8:6, 7; 9:15). இந்த இரட்சிப்பு "ஆபிரகாமின் சந்ததியான" இயேசுவினால் நமக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது; மற்றும் இதைத் தழுவிக்கொள்ள நமது மனவிருப்பத்தின் மீதே இதன் நிறைவான வெற்றி அமைந்துள்ளது. விசுவாசத்தினால் நாம் தேவன் மீது நம்பிக்கை வைத்து, அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து நமது வாழ்வை அவரது வசனத்திற்குக் கீழ்ப்படிதல் மூலமாக அவருடைய பராமரிப்பில் வைக்கக் கடவோம்.

# புதிய ஏற்பாட்டில் ஆபிரகாம்

*பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுவது மாத்திரமின்றி, புதிய ஏற்பாட்டிலும் முப்பத்தி ஒன்பது முறை குறிப்பிடுமளவுக்கு, உலகத்தின் மீட்பிற்கான தெய்வீகத் திட்டத்தில் ஆபிரகாம் மிகவும் குறிப்பிடத்தக்கவராக இருக்கிறார். புதிய ஏற்பாட்டில் ஆபிரகாம் பல வகைகளில் பணிசெய்கிறார்:*

*1. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் தேவனுடைய பணித் தொடர்ச்சி மற்றும் அடையாளப் படுத்துதல் ஆகியவற்றைக் காண்பிக்க. பழைய ஏற்பாட்டில் போன்றே புதிய ஏற்பாட்டிலும் தேவன், "ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன்" என்று அடையாளப்படுத்தப்படுகிறார் (நடபடிகள் 3:13; காண்க மத்தேயு 22:32; லூக்கா 1:55).*

*2. தேவனுடைய உண்மைத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்த. அவர் ஆபிரகாமுக்குத் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொண்டது போன்றே இன்றைய நாட்களிலும் தமது மக்களிடத்தில் அதைக் காத்துக்கொள்கிறார் (லூக்கா 1:73; நடபடிகள் 3:25, 26; எபிரெயர் 6:13).*

*3. இயேசு உண்மையிலேயே ஆபிரகாமின் "சந்ததியாக," இஸ்ரவேலுக்கும் உலகம் முழுவதற்கும் கூடத் தேவன் தமது திட்டங்களை நிறைவேற்றத் தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியாக இருக்கிறார் என்பதைச் சரிபார்க்க (மத்தேயு 1:1; கலாத்தியர் 3:14-16).*

*4. இரட்சிப்பு கிரியைகளின் மூலம் ஈட்டப்படுவதால் வருவதல்ல, ஆனால் விசுவாசத்தின் மூலம் தேவனிடமிருந்து பெறப்படுகிற கொடையாக உள்ளது என்பதை வலியுறுத்த (ரோமர் 4; கலாத்தியர் 3:14-29).*

*5. உடல் ரீதியான சந்ததியல்ல, ஆனால் விசுவாசமே ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக (சந்ததியாக) ஆக்குகிறது என்பதைப் போதிக்க (யோவான் 8:33-45; ரோமர் 9:7).*

*6. விசுவாசத்தின் சாராம்சமான, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது முற்றான விசுவாசத்தின் உதாரணமாகப் பணிசெய்ய, மற்றும் விசுவாசத்தின் உண்மையான இயல்பை - அது தேவனை வெறுமனே ஒப்புக்கொள்வதை மாத்திரமல்ல ஆனால் செயல்முனைப்பான கீழ்ப்படிதலை உள்ளடக்கி இருக்கிறது என்பதை - விவரிக்க (எபிரெயர் 11:8-12, 17-19; யாக்கோபு 2:21-23; காண்க மத்தேயு 3:9).*

*7. விசுவாசிகள், ஆபிரகாம் மற்றும் விசுவாசத்தின் மற்ற மாபெரும் வீரர்களின் பிரசன்னத்தில் இருக்கப்போகும் பரலோகத்தின் சந்தோஷத்தை விவரிக்க (மத்தேயு 8:11; லூக்கா 13:28; 16:22, 23).*